மட்டக்களப்பு மாநகர சபை-2013

---

# 1 நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களை 2014 மார்ச் 27 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 10 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 04 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

## 1.2 அபிப்பிராயம;

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மட்டக்களப்பு மாநகர சபை இன் 2013 திசம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

### 1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

உள்ளுராட்சி மாகாணசபைகள் அமைச்சு செயலாளரின் 2014 சனவரி 27ஆம் திகதிய பீஎல்/05/பீஏ/எஸ்எவ்பீஎஸ்ஏஎஸ் ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1990 ஆம் ஆண்டில் காணாமல் போன ரூபா.6,860,650 பெறுமதியான தண்ணீர் பவுசர் இயந்திரத்தை ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது நிதிக்கூற்றுக்களில் தொடர்ச்சியாக சொத்தாகக் காட்டப்பட்டு வருகின்றது.

(ஆ) மாநகரசபைக்குச் சொந்தமான நூல்நிலையத்தில் 2013 திசெம்பர் 31இல் உள்ளவாறான 29,000 நூல்நிலைய புத்தகங்கள் பெறுமதி மதிக்கப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) 2004 ஆம் ஆண்டில் ஒரு அரசசார்பற்ற நிறுவனத்திலிருந்து நன்கொடையாக பெறப்பட்ட உடற்பயிற்சி உபகரணங்கள் பெறுமதி மதிக்கப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்கு செலுத்தவேண்டிய கணக்காய்வுக்கட்டணம் ரூபா.150,000 இற்கு கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

1.3.3 பெறப்படவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) படவரைஞர்களுக்கு கொடுக்கப்படவேண்டிய ரூபா.558,185 தொகையை கொடுத்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 2009ஆம் ஆண்டில் இருந்து வைப்புக் கணக்கில் இடப்பட்டுள்ளது.

(ஆ) ஓய்வு பெற்ற மற்றும் இடமாற்றலாகிச் சென்ற 30ஊழியர்களின் பதவியினர் கடன் நிலுவை ரூபா.775,658 தொகையை இளைப்பாற்று பணிக்கொடையிலிருந்து அல்லது பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுவருகின்றது.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

நிதிக்கூற்றுக்களின் படிகீழ் காட்டப்பட்ட விடயங்களுக்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்கு இனம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
| --- | --- | --- |
| | ரூபா. | |
| காணிகளும் கட்டிடங்களும் | 111,766,669 | காணி உரிமைப்பத்திரம் |
| இயந்திர உபகரணங்கள் | 16,642,382 | நிலையான சொத்துப் பதிவேடுகள், சொத்துக்கள் பற்றிய விபரமான பட்டியல் மற்றும் மெய்மையாய்வுச் சபை அறிக்கைகள் |
| மோட்டார் வாகனங்கள் | 85,734,437 | |
| தளபாடங்கள் | 9,389,850 | |
| பொது களஞ்சியப் பொருட்கள் | 46,149,231 | |

2. நிதிமீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி சபையின் மீளாய்வாண்டின் நிதிப்பெறுபேறானது செலவிலும் கூடிய வருமான மிகையாக ரூபா.20,723,801 விளைந்துள்ளதுடன் நேர் ஒத்த முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது செலவிலும் கூடிய வருமான மிகையாக ரூபா.6,236,621 விளைந்திருந்தது. இது நிதிப்பெறுபேற்றில் ரூபா.14,487,180 அதிகரிப்பை காட்டுகின்றது.

2.2 வருமான முகாமைத்துவம்

2.2.1 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ள படியான வருமானம் என்பவற்றுக்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ள படியான வருமானம் | வித்தியாசம் |
| --- | --- | --- | --- |
| | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வீதவரிகள் | 29,543,207 | 4,103,442 | 25,439,765 |
| வாடகை | 3,318,452 | 3,652,764 | (334,312) |
| ஏனைய வரிகள் | 10,765,393 | 15,576,474 | (4.811,081) |

2.2.2 வீதவரிகள்

-------------------

அறவிடவேண்டி வீதவரிகள் 1990 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை ரூபா.13,517,544 நிலுவையாக உள்ளது.

2.2.3 வரிகள்

-------------

அறவிடவேண்டிய வரிகள் நிலுவை 1990ம் ஆண்டில் இருந்து மீளாய்வாண்டு இறுதிவரை ரூபா.2,296,174 நிலுவையாய் இருந்தது.

2.2.4 ஏனைய வருமானங்கள்

------------------------------------

அறவிடவேண்டிய களியாட்டவரி, குத்தகைகள், விளம்பரக் கட்டணம் என்பன மீளாய்வாண்டில் நிலுவையாக ரூபா.9,073,640 காணப்படுகிறது.

3. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை.

----------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1995 ஆம் ஆண்டிலிருந்து சபையினால் ஒய்வூதியத்திட்டத்திற்கான பங்களிப்பு பணத்தை மாதாந்தம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததால் மீளாய்வாண்டின் இறுதிவரை ரூபா.26,943,315 பங்களிப்பு பணத்தை செலுத்த வேண்டியுள்ளது.

(ஆ) 9 வாகனங்கள் ஓட்ட வாசிப்புமானி செயல் இழந்த நிலையில் 5 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாமல் உபயோகிக்கப்படுகின்றன. இதை திருத்த உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.2 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்.

---------------------------------------------------

சபைக்கு சொந்தமான 02 லொறிகள், 05 ரெக்டர்கள், 03 பவுசர்கள் திருத்தப்படாததினால் ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் உபயோகப்படுத்தப்படாமல் இருக்கின்றது.

3.3 திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவம்

--------------------------------------------------------------

2009ம் ஆண்டில் நெக்டப் திட்டத்தின் கீழ் ரூபா.10 மில்லியன் கிரயத்தில் திருப்பெருந்துறையில் அமைக்கப்பட்ட திண்மக் கழிவுகளை அகற்றுவதற்கான நிலையம் முறையாக திண்மக் கழிவுகளை தரம் பிரித்து முகாமைத்துவம் செய்யாத காரணத்தினால் பின்னர் இத்திட்டம் முற்றாகக் கைவிடப்பட்டது. இவ்வாறு இத்திட்டம் கைவிடப்பட்டதனால் அப்பிரதேசமக்களுக்கு சூழல் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

----------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

-------------------------------

பாதீடு செய்யப்பட்ட செலவினம் மற்றும் உள்ள படியான செலவினத்திற்கும் இடையில் 10% தொடக்கம் 60% வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டுள்ளமையினால் பாதீடானது முகாமையின் ஒரு வினைத்திறனான கட்டுப்பாடுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை தெளிவாக அவதானிக்கப்பட்டது.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-----------------------------------------------------------

கீழ் வரும் கட்டுப்பாட்டுப் விடயங்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படவேண்டும்.

(அ) வருமானசேகரிப்பு.

(ஆ) பாதீட்டு கட்டுப்பாடு.

(இ) நிலையான சொத்துக்கள் பராமரிப்பு